# தரம் 11



# தமிழ் மொழியும் இலக்கியமும்

## பேதைமை

அலகு 10
திருக்குறள்

Mr. S. Uthayanan
NP/J/ Hindu College , Jaffna





## திருக்குறள்

- திருக்குறள் எழுந்த காலப்பகுதி சங்கமருவிய காலம் ஆகும்.
- தமிழில் உள்ள அறநூல்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயது திருக்குறளாகும்.
- இதனை இயற்றியவர் திருவள்ளுவர்.

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

- பெருநாவலர்
- பொய்யில் புலவர்
- பொய்யாமொழிப் புலவர்
- மாதானுபங்கி
- முதற்பாவலர்
- தெய்வப் புலவர்
- தேவர்
- நாயனார்






## திருக்குறளின் வேறுபெயர்கள்

- முப்பால்
- உத்தரவேதம்
- தெய்வநூல்
- வாயுறை வாழ்த்து
- தமிழ்மறை
- பொதுமறை
- பொய்யாமொழி



## திருக்குறளின் அமைப்பு

- அறத்துப்பால்
- பொருட்பால்
- காமத்துப்பால்

ஆகிய முப்பால்களைக் கொண்டு விளங்குகின்றது.

ஒரு குறளுக்கு 7 சீர்கள்.


மொத்தம் 133 அதிகாரங்கள்

மொத்தம் 1330 குறள்கள்

அறத்துப்பால் – 34 அதிகாரங்கள்

பொருட்பால் – 70 அதிகாரங்கள்

இன்பத்துப்பால் – 25 அதிகாரங்கள்





## அறத்துப்பால்

இல்லறவியல் -20

துறவறவியல்-13

ஊழியல் -1

## பொருட்பால்

அரசியல் -25

அமைச்சியல்- 10

அரணியல்-2

கூழியல்-1

படையியல்-2


நட்பியல் -17

குடியியல்-13

## காமத்துப்பால்

களவியல்-7

கற்பியல்-18



## பேதைமை – அதிகார வைப்பு

பொருட்பாலில் நட்பியலில் கூடா நட்பு என்னும் அதிகாரத்தை அடுத்து எண்பத்து நான்காவது அதிகாரமாக பேதைமை வைக்கப்பட்டுள்ளது.





## பேதைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் விடயம்

அறியாமை என்ற குற்றம் எத்தகையது என்பது பற்றியும் அறியாமையுடையோர் செயல் பற்றியும் இவ் அதிகாரம் விளக்குகின்றது.



**பேதைமை**

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

பின்வரும் குறள்களைச் சந்திபிரித்து எழுதுக

1. பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
   ஊதியம் போக விடல்.

**பேதைமை என்பது ஒன்று யாது எனின் ஏதம் கொண்டு**

**ஊதியம் போக விடல்.**

.....................................................................................

2. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

**பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்.**
..........................................................................................

3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

**நாணாமை நாடாமை நார் இன்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.**

.....................................................................................

4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
   பேதையின் பேதையார் இல்.

**ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்கா**
**பேதையின் பேதையார் இல்.**

..................................................................................

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
   தான்புக் கழுந்தும் அளறு.

**ஒருமை செயல் ஆற்றும் பேதை எழுமையும்**
**தான் புக்கு அழுந்தும் அளறு.**

........................................................................................

6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

**பொய் படும் ஒன்றோ புனை பூணும் கை அயறியா**
**பேதை வினை மேற்கொளின்.**

.....................................................................................

7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
   பெருஞ்செல்வம் உற்றக் கடை.

**ஏதிலார் ஆர தமர் பசிப்பர் பேதை**
**பெரும் செல்வம் உற்ற கடை.**

.................................................................................

8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

**மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன்**
**கை ஒன்று உடைமை பெறின்.**

.....................................................................................

9. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

**பெரிது இனிது பேதையார் கேண்மை பிரிவின் கண்**
**பீழை தருவது ஒன்று இல்.**

..........................................................................

10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

**கழாஅ கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்து பேதை புகல்.**

.......................................................................................

பின்வரும் குறள்களைக் கொண்டுகூட்டுக.

1. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
   தான்புக் கழுந்தும் அளறு.

**பேதை எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு**

**ஒருமை செயல் ஆற்றும்**

.........................................................

2. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

**கையறியா பேதை வினை மேற்கொளின்**

**பொய் படும் ஒன்றோ புனை பூணும்**

..........................................................

3. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
   பெருஞ்செல்வம் உற்றக் கடை.

**பேதைபெரும் செல்வம் உற்ற கடை**

**ஏதிலார் ஆர தமர் பசிப்பர்**

.............................................................

4. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
   கையொன்று உடைமை பெறின்.

**பேதை தன் கை ஒன்று உடைமை பெறின்**

**மையல் ஒருவன் களித்தற்றால்**

........................................................................

5. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

**சான்றோர் குழாஅத்து பேதை புகல்.**

**கழாஅ கால் பள்ளியுள் வைத்தற்றால்**

.......................................................

பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க

1. "ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்" இங்கு 'ஏதம்' என்பது

அ) நன்மை

ஆ) பகைமை

இ) கேடு

ஈ) கோபம்

2. “பேதைமையுள் எல்லாம் பேதைமை” இங்கு ‘பேதைமை’ என்பது

அ) பணிவுடமை

ஆ) அறியாமை

இ) பகைமை

ஈ) கருணை

3. “நாணாமை நாடாமை நாரின்மை” இங்கு ‘நாரின்மை’ என்பது

அ) பணியாமை

ஆ) பண்பின்மை

இ) காவாமை

ஈ) அன்பின்மை

4. “ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும்” இங்கு ‘ஓதி’ என்பது

அ) கற்று

ஆ) நடந்து

இ) கேட்டு

ஈ) விரும்பி

5. “எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு” இங்கு ‘அளறு’ என்பது

அ) பக்கம்

ஆ) சேய்மை

இ) நரகம்

ஈ) சுவர்க்கம்

6. "பொய்படும் ஒன்றோ புனை பூணும்" இங்கு 'புனை' என்பது

அ) தெப்பம்

ஆ) மூங்கில்

இ) விலங்கு

ஈ) நகரம்

7. "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்" இங்கு 'தமர்' என்பது

அ) தேவர்

ஆ) உறவினர்

இ) பகைவர்

ஈ) அசுரர்

8. “பீழை தருவது ஒன்று இல்” இங்கு ‘பீழை’ என்பது

அ) மகிழ்ச்சி

ஆ) சுற்றம்

இ) துன்பம்

ஈ) அன்பு

9. “பெரிதுஇனிது பேதையார் கேண்மை” இங்கு ‘கேண்மை’ என்பது

அ) அன்பு

ஆ) இனிமை

இ) கருணை

ஈ) நட்பு

10. “கழாஅக்கால பள்ளியுள் வைத்தற்றால்” இங்கு ‘பள்ளி’ என்பது


அ) பாடசாலை

ஆ) முற்றம்

இ) மயக்கம்

ஈ) படுக்கை

பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை இணைக்குக.


1. ஏதம்
2. நார்
3. அளறு
4. தமர்
5. பீழை
இன்பம்
பிறர்
ஆக்கம்
வன்பு
சுவர்க்கம்

சரி பிழை இடுக.

1. பேதை கேடு தருபவற்றைக் கொண்டு நன்மை பயப்பவற்றைக் கைவிடுவான் ( ✓ )
2. பேதை தனக்குப் பொருந்தாதவற்றைச் செய்வதில் ஆசை கொள்வான். ( ✓ )
3. பேதை ஒரு செயலை மேற்கொண்டால் அது பாழ்பட்டுவிடும். ( ✓ )
4. பேதையருடனான நட்பு பிரிவின் போது மிக்க துன்பத்தைத் தரும். ( ✗ )
5. பேதையிடம் சேர்ந்த செல்வத்தை அவன் உறவினர்கள் அனுபவித்துக்கொள்வர். ( ✗ )

சுருக்கமான விடை தருக.

**பின்வரும் குறள்களில் இடம்பெற்றுள்ள அணிகளை எழுதுக.**

1. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
   கையொன்று உடைமை பெறின்.

   உவமையணி
   ............................................................................

2. கழாஅக்கால பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
   குழாஅத்துப் பேதை புகல்

   உவமையணி
   ............................................................................

**பின்வரும் குறளில் இடம்பெற்றுள்ள அளபெடையை எழுதுக.**

கழாஅக்கால பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்தப் பேதை புகல்

உயிரளபெடை
...........................................................................

சுருக்கமான விடை தருக

1. "ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்"

அ) ஊதியம் என்பதன் கருத்து யாது?

**நன்மை**

……………………………………………………………………………..

ஆ) பேதையின் இயல்பு யாது?

**கேடு தருபவற்றைக் கொண்டு நன்மை பயப்பவற்றைக் கைவிடுதல்**

……………………………………………………………………………..

2. "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்னும்

   பேணாமை பேதை தொழில்"

அ) 'நார்' என்பதன் கருத்து யாது?

அன்பு

……………………………………………………………………..

ஆ) பேதையின் தொழில்கள் யாவை?

தகாதவற்றுக்கு நாணமலிருத்தல், தக்கவற்றை நாடாமலிருத்தல், அன்பின்மை, நன்மை ஒன்றையும் விரும்பாமை

………………………………………………………………………………….

3. “பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
   பீழை தருவதுஒன்று இல்”

அ) கேண்மை என்பதன் எதிர்க்கருத்து யாது?

பகைமை
…………………………………………………………………………..

ஆ) பேதையுடனான நட்புப்பற்றி கூறப்படுவது யாது?

பிரிவினிடத்து துன்பம் தருவதில்லை
…………………………………………………………………………..

4. “ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்”

அ) உம் இடைச்சோல் உணர்த்தும் பொருள் யாது?

**தேற்றம்**

.......................................................................................

ஆ) பேதையில் இயல்புல்கள் யாவை?

**நூல்களை கற்று உணர்ந்தும், பிறர்க்கு எடுத்துரைத்தும், தான் அவற்றின் வழியில் ஒழுகாதிருப்பான்.**

.......................................................................................

5. “ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
 பெரும் செல்வம் உற்றக் கடை”

அ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

முரண் அணி

..........................................................................

ஆ) பேதையிடம் சேர்ந்த பெரும் செல்வத்தின் பயனை அனுபவிப்பவர் யார்?

உறவல்லாதவர்

..........................................................................

## கட்டுரை வினா

1. பேதைமை என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பேதைமை என்றால் என்ன ( 4 புள்ளிகள் )

ஆ) பேதையிடம் சேர்ந்த செல்வம் ( 6 புள்ளிகள் )

என்பவற்றை விளக்குக.

## அ) பேதைமை என்றால் என்ன

- கெடுதியானதைக் கைக்கொண்டு ஊதியமானதைக் கைவிடுதல்.
- தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் விருப்பத்தைச் செலுத்துதல்.

## ஆ) பேதையிடம் சேர்ந்த செல்வத்தின் நிலை

○ பேதையிடம் செல்வம் சேர்ந்தவிடத்து செல்வத்தின் நிலை

- செல்வத்தை உறவல்லாதவர்கள் அனுபவிக்க உறவினர்கள் பசியால் வருந்துவர்

○ செல்வம் சேர்ந்தவிடத்து பேதையின் நிலை

- பித்துப்பிடித்தவன் மதுவருந்தி மயங்கியது போல நடந்துகொள்வான்.

**கடந்த கால வினா – 2020**

பேதைமை என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பேதையார் இயல்பு

ஆ) பேதையார் அடையும் கேடு

## அ) பேதையார் இயல்பு

- தனக்கு கேடு தருபவற்றை ஏற்றுக் கொண்டு, நன்மை பயப்பனவற்றைக் கைவிட்டுவிடுதல்.
- தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஈடுபடுதல்.
- வெட்கப்பட வேண்டியவற்றிற்கு வெட்கப்படாமை.
- நல்லவற்றை நாடாமை.
- யாரிடத்தும் அன்பில்லாமை.
- பேணிக்காக்க வேண்டிய எதனையும் பேணாமை.
- ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காமை.
- பேதையின் செல்வம் பிறருக்கும் பயன்படுதல்.
- தனது உடைமைகளை சரியாகப் பயன்படுத்தத் தெரியாமை.

## ஆ) பேதையார் அடையும் கேடு

- ஏழு பிறவியிலும் வருந்தக்கூடிய நரகத்தை ஒரு பிறவியில் ஏற்படுத்திக் கொள்ளல்.
- செய்யும் வகை அறியாத பேதையின் செயல் பாழ்படும். அவன் தண்டனை பெற்று விலங்கிடப்படுவான்.

# நன்றி